(4) தகவல் கோரல்

(அ) பேரவையில் காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சி குறித்து.

திரு. சி. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, மணிமாறன் அவர்கள் எதிர்க்கட்சிக்காரர்கள் வற்புறுத்துகிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். காந்தி-காமராஜ் கட்சியை சார்ந்த உறுப்பினர்களை ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள்தான்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தங்களுடைய ஒழுங்குப் பிரச்னை என்னவாயிற்று?

திரு மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, ஆறுமுகம் அவர்கள் கேட்கும் கேள்வி முக்கியமானது. ஏனென்றால், அலுவல் ஆய்வுக் குழுவில் அந்தக் கட்சி இடம் பெற்றிருக்கிறது. இப்போது அந்தக் கட்சி இருக்கிறதா அல்லது பெயருக்காவது இருக்கிறதா, கரைந்து விட்டதா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்? இப்போது எத்தனை கட்சிகளுக்கு, நீங்கள் அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்திற்கு, அழைப்பு அனுப்புவதாக இருந்தால் அனுப்புவீர்கள்? இந்த விவரம் எங்களுக்குத் தெரிய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; அந்தக் கட்சியிலிருந்து எனக்கு எந்தக் கடிதமும் வரவில்லை. ஆனால், அந்தக் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் அவர்கள் ஆளும் கட்சியான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்து விட்டேன் என்று கடிதம் எழுதியிருக்கிறார்கள். அவ்வளவுதான். இன்னும் அந்தக் கட்சி இருக்கிறதா, இல்லையா என்பதைப் பற்றி பின்னால் விசாரித்துச் சொல்லுகிறேன். அவர் சேர்ந்து விட்டதாக மட்டும் தான் கடிதம் வந்திருக்கிறது.

திரு மு. கருணாநிதி: இந்தப் பிரச்சினையிலே ஒரு சந்தேகம் கேட்க விரும்புகிறேன். அந்தக் கட்சி இருக்கிறதா? இல்லையா? இப்போது யார் எழுதி அனுப்புவது என்று புரியவில்லை. எப்படி எழுதி அனுப்புவார்கள்? கட்சித் தலைவர் திரு. குமரி அனந்தன் அவர்கள் அவர் தம்முடைய கட்சி சட்டசபையில் இல்லையென்று எழுதுவாரா? எப்படி எழுதுவார்கள் என்று புரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தக் கட்சியிலிருந்து உறுப்பினர் ஆளும் கட்சிக்குப் போயிருப்பதாகக் கடிதம் எழுதியிருக்கிறார். பிறகு அந்தக் கட்சியிலிருந்து கடிதம் எதுவும் வரவில்லை என்றாலே அந்தக் கட்சி இல்லையென்றுதான் பொருள்.